[1995 ஏப்ரல் 25

424—

நெரிசல் நேரங்களில் நகரப் பேருந்துகள் இயக்குதல்

***20154—திரு. டி. வேலையா :**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

காலை, மாலை ஏற்படும் நெரிசல் நேரங்களில் புறநகர்ப் பகுதியிலிருந்து கல்விக் கூடங்கள்,. அலுவலகங்கள் செல்பவர்களுக்கு வசதியாக நகரப் பேருந்துகளில் தேவையான அளவு கட் சர்வீஸ்கள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களினாலும் கல்விக் கூடங்கள், அலுவலகம் செல்பவர்களுக்கு வசதியாக காலை மாலை நெரிசல் நேரங்களில் தேவையான அளவுக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களைப் பொறுத்தவரையில் இப்போது குடிநீருக்கு அடுத்தபடியாக முக்கியமாக கருதுவது பஸ் வசதி பற்றிதான். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. திருநெல்வேலியைப் பொறுத்தவரையில் பக்கத்தில் சங்கர் நகர், தச்சநல்லூர், பேட்டை, பழைய பேட்டை போன்ற புறநகர்ப் பகுதிகள் இருக்கின்றன. அவைகள் பெரிய பகுதிகளாக இருக்கின்றன. அங்கிருந்து எல்லாம் அதிக அளவிலே வருவதற்கு, டவுன் பஸ்ஸுக்காக ஆட்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலியை பொறுத்தவரையில் இது வரை 'கட் சர்வீஸ்' அதாவது ஒரு வண்டியை ஒரு இடத்திலே நிறுத்தி திரும்ப டவுனுக்கு வருகிற மாதிரி வசதி இல்லை. சென்னையிலே கட் சர்வீஸ் பஸ்கள் நிறைய இருக்கின்றன. அதுபோக, ஓடிக் கொண்டிருக்கின்ற டவுன் பஸ்களையும், சில நேரங்களில் வேறு ரூட்டுகளுக்கு மாற்றுவதுடன், விழாக்கள் போன்றவைகள் நடைபெறுகின்ற இடங்களுக்கு ஸ்பெஷல் பஸ்ஸாக மாற்றி விடுகிறார்கள். ஆகவே, கால நேரத்தை மாற்றும்போது எம்.எல்.ஏ.க்களைக் கலந்தாலோசித்து செய்தால் நன்றாக இருக்கும். ஆகவே, சென்னையில் உள்ளது போன்று, பீக் ஹவர்ஸ் - என்று சொல்லப்படுகின்ற காலை 8 முதல் 10 மணி வரையிலும், மாலை 5 முதல் 7 மணி வரையிலும், திருநெல்வேலியிலும்

1995 ஏப்ரல் 25]

பீக் ஹவர்ஸ் பஸ்களை விட மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 3 கேள்விகளைக் கேட்டிருக்கிறார். ஒன்று காலநேரத்தை மாற்றுகிறபோது சட்டமன்ற உறுப்பினருக்கும் அதைத் தெரிவித்து மாற்றப்பட வேண்டுமென்று சொன்னார். கால அட்டவணையை மாற்றுவது இரண்டு மூன்று சதவீதம்தான். பெரும்பாலான இடங்களில் கால அட்டவணையை மாற்றுவதே இல்லை. இரண்டாவதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற பிரச்சினைகளில், குடிநீருக்கு அடுத்தபடியாக போக்குவரத்து இருக்கிறது என்று சொன்னார். தமிழகத்தில் வரலாற்றைப் படைத்து கொண்டிருக்கிற (மேசையை தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பின்னர் பல்வேறு இடங்களில் பேருந்துகளைக் கூடுதலாக இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் புறநகர்ப் பேருந்துகளை, தேவைக்கேற்ப மேலும், அலுவலர்கள் அலுவலகங்களுக்குச் செல்லுகின்ற நேரங்களிலும், மாணவர்கள் பள்ளிக்குச் செல்லுகின்ற நேரத்திலும் கூடுதலாக இயக்க வேண்டுமென்று கேட்டுள்ளார். புறநகர்ப் பேருந்துகளில் எவ்வளவு வேண்டுமானாலும் ஏற்றிக் கொள்ளலாம் என்ற நிலையை கட்டபொம்மன் போக்குவரத்து கழகத்திற்கு, நகரப் பேருந்துகள் இல்லாத நேரத்தில், நெரிசலான நேரத்தில், புறநகர் பேருந்துகளில் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10.15

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற நகர் வண்டிகளில் ஏறிக்கொள்ளலாம் என்று சொன்னாலும், இந்த தச்சநல்லூர், சங்கர்நகர், பேட்டை, பழையபேட்டை போன்ற பகுதிகளில் அங்கிருந்து வருகின்றபோதே அந்த வண்டி முழுமையாக நிரம்பி வருகின்ற காரணத்தாலே அங்கே நிறுத்தி ஆட்களை ஏற்றுவதற்கு பிராக்டிகலாக சிரமம் இருக்கிறது. இந்த டவுன் பஸ்களையே 'கட் சர்வீசாக' திருப்பி அனுப்பினால் அங்கே இருக்கிற கூட்டத்தை வண்டியிலே ஏற்றிக்கொண்டு திரும்ப டவுனிலே கொண்டு இறக்கிவிட்டால் அந்த நெரிசல் நேரத்தைச் சமாளிக்கலாம் என்பதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன். ஆகவே கட் சர்வீஸ் என்கின்ற அந்த சர்வீசை சென்னையில் இருப்பதைப் போல் திருநெல்வேலி போன்ற நகர்ப்பகுதிகளில் ஏற்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகர் வேறு, திருநெல்வேலி என்பது வேறு. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதிலேகொண்டு அவர் குறிப்பிடுகின்ற பகுதிக்கு கட் சர்வீஸ் விடுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பல்வேறு பகுதிகளிலிருந்து நகரங்களுக்கு வந்து படிக்கின்ற மக்கள் புறநகர்ப் பகுதியிலிருந்து வருவதற்கு சாத்தியக்கூறு இல்லாமல், பேருந்து வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதுபோன்ற ஒரு முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சரவர்கள் எங்கெங்கே புறநகரிலிருந்து நகரங்களுக்கு வந்து படிக்கின்றார்களோ, அதுபோன்ற நகரங்களுக்கு கட் சர்வீஸ் விடுவதற்கு ஒரு கட்டாயமாக, எல்லா கார்ப்பொரேஷன்களுக்கும் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரம், மதுரை போன்ற மாநகரங்களிலேதான் இதுபோன்ற கட் சர்வீஸ் விட முடியும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் புறநகர்ப் பேருந்துகளிலே பயணம் செய்வதிலே எந்தத் தடையும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பதைப்போல எல்லா இடங்களிலும் நகரப் பேருந்துகள் விட வேண்டுமென்று சொன்னால், கூடுதலாக இன்னும் போக்குவரத்துக் கழகத்திலே 5000 நகரப் பேருந்துகள் இருந்தாலொழிய அத்தனைபேரையும் திருப்தி செய்யமுடியாது. ஆகவே போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலைக்கேற்ப எதிர்காலத்திலே கூடுதலாகப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும். இப்போது அதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பீக் ஹவர்ஸ்' நேரங்களில், காலையிலும் மாலையிலும், பள்ளிகளுக்கும், அலுவலகங்களுக்கும் செல்கின்ற மாணவர்களும், அதிகாரிகளும் மற்றும் தொழிற்சாலைகளுக்குச் செல்லக்கூடியவர்களும், கூட்ட நெரிசலில் அவதிப்படுவது எல்லோருக்கும் தெரியும். அதிலே எத்தனை பஸ்கள் விட்டாலும் அது போதாமல்தான் இருக்கிறது. ஆகவே மினிபஸ்கள் என்ற அளவில் காலை மாலை நேரங்களில், அந்த பீக் ஹவர்சில் இயக்குவதற்கு,

1995 ஏப்ரல் 25]

அதை மகளிரே ஓட்டுவதற்கும், நடத்துவதற்கும் ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்வாரா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கெல்லாம் அமைச்சர் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டார். மினிபஸ் முடியாது என்று சொல்லியிருக்கிறார். மகளிரைப் போடமுடியவில்லை என்றும் சொல்லியிருக்கிறார். அமைச்சர் பதில் ஏதாவது சொல்லவேண்டுமென்று சொன்னால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிரை பேருந்து ஓட்டுநர், நடத்துனராக நியமிக்க இயலாது என்று இதற்கு முன்னாலே நான் பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அன்றைக்கு இல்லைபோல் இருக்கிறது. அதேபோல் மினி பஸ் இயக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மினி பஸ் இயக்குவதிலே போக்குவரத்துக் கழகத்திற்கு பெரும் நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தாலே அதற்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் பீக் ஹவர்சில் நெரிசல் இருக்கிறதென்று சொன்னார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. எல்லோரும் ஒரே நேரத்தில் செல்கின்ற நிலை தமிழகத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கல்விக்கூடங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு டில்லியை எடுத்துக்கொண்டால், தலைநகராக இருக்கிற டில்லியில் காலை நேரத்திலே கல்விக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. 7½ மணிக்கே கல்விக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு அலுவலகம் செல்பவர்கள் 9 மணியிலிருந்து 10 மணி வரையிலும் அலுவலகத்திற்குச் செல்கிறார்கள். ஆக பீக் ஹவர்சில் ஒரே சீராக இருக்கின்ற நிலை அங்கிருக்கிறது. ஆனால் இங்கே ஒரே நேரத்தில் பள்ளி செல்கின்ற குழந்தைகளும், அதே நேரத்தில் கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்களும், அதே நேரத்தில் அலுவலகத்திற்குச் செல்பவர்களும் ஒரே நேரத்திலே செல்கின்ற காரணத்திலேதான் இதுபோன்ற இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இதுபோன்ற நிலைகளில் உங்களைப் போன்ற நல்ல அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள், இங்கே இருக்கிற பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் இதிலே கருத்துக்களைச் சொல்லி, கல்லூரி நேரங்களை மாற்ற, அல்லது பள்ளி நேரங்களை மாற்றுவதற்கு அவர்கள் முன்வருவார்களேயானால், பெற்றோரிடத்திலே எடுத்துச்சொல்லி செய்தால், அது அரசுக்கு ஏதுவாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கார்ப்பொரேஷன் பஸ்களை எல்லாம் குறிப்பிட்ட ஸ்டாப்பிங்கிலே நிறுத்திவிடுகிறார்கள். ஆனால் தனியார் பஸ் அந்த ஸ்டாப்பிங்கில் நிறுத்தாமல், கூட்டம் அதிகமாக இருந்தால் அந்த பஸ்ஸை எடுத்துக்கொண்டு சென்று விடுகிறார்கள். ஆகவே அந்த தனியார் பஸ் மீது அதுபோன்ற ஸ்டாப்பிங்கில் நிறுத்தாமல் இருக்கின்ற குறையை நிவர்த்தி செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று ஏதாவது பகுதிகளில் இருக்குமேயானால், குறிப்பிட்டு நீங்கள் சொல்வீர்களானால், உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி காலை மாலையில் ஏற்படுகின்ற நெரிசலைத் தவிர்ப்பதற்காக கல்கத்தா மற்றும் அயல்நாடுகளில் இருப்பதைப்போல டிராம் வண்டிகள் ஏதாவது குறைந்த செலவிலே தொடர்ச்சியாக ஓட்டுகின்ற ஏற்பாடுகள் ஏதேனும் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: அதுபோன்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் ஜன நெருக்கம் அதிகமாகக் கொண்ட ராயபுரம் போன்ற இடங்களிலேதான் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். ஏற்கெனவே அடுக்குமாடி பஸ்கள் சென்னையிலே இருந்தாலும், இன்னும் அதிக அளவில் ஜன நெருக்கடியுள்ள இடங்களில் விடுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுக்குமாடிப் பேருந்துகள் முதலிலே சென்னையிலே இயக்கினார்கள். அப்படி இயக்குகிறபோது நம்முடைய இந்திய துணைக் கண்டத்திலே பார்க்கின்றபோது அங்கே பேருந்துகள் நிறுத்துகின்ற பகுதிகள் 400 மீட்டருக்கு ஒரு பஸ் ஸ்டாப் என்று நிறுத்தப்பட்டிருக்கிறது. வேறு பகுதியிலே அப்படி அல்ல. தொலைத் தூரத்தில் ஒரு பஸ் ஸ்டாப்

இருக்கிறது. நம்முடைய இந்திய துணைக் கண்டத்திலே குறுகிய இடமாக இருக்கிற இடங்களில் கூட பஸ் ஸ்டாப் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலேதான், மௌன்ட் ரோட் போன்ற இடங்களில் மாடி பஸ்களில் இருந்து கீழே இறங்கவும், ஏறவும் அவ்வளவு சாத்தியக் கூறாக இல்லை என்ற காரணத்தினால்தான் ஓடிக் கொண்டிருந்த பேருந்துகளைக் கூட இன்றைக்கு அரசு நிறுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனத்திலே கொண்டு சென்னை மாநகருக்கு வருகின்ற ஜூன் மாதத்திற்குள் 200 பேருந்துகளை பல்லவன் போக்குவரத்துக் கழகம், அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் போன்ற போக்குவரத்துக் கழகங்களில் கூடுதலாக இயக்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆணையை இந்தத் துறை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 425, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. திரு. அப்பு நடேசன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

425 —

முஞ்சிறை - சென்னைக்குப் பேருந்து இயக்குதல்

*** *38301*—*திரு. மா. சுந்தரதாஸ் :***

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு தொகுதி, முஞ்சிறையிலிருந்து - சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்து கழகப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.